**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 30/2019

**06.03.2026**

## P.W.1- பஞ்சம்மாள்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், என்னுடன் பிறந்த இரண்டு சகோதரர்கள் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். என்னை மேலவெள்ளைமலைப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது சகோதரர்கள் ஆண்டவர், பழனிச்சாமி இருவரும் மேற்படி ஊரில் வசித்து வந்தனர் என்றால் சரிதான். எனது அப்பா இறந்து சுமார் 45 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். எனது இரண்டு சகோதரர்கள் இறந்து சுமார் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். எனது சகோதரர்கள் உயிருடன் இருக்கும்போது எந்தவித பங்கும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நோட்டுசெல்வம், தோட்டி, எனது தம்பி, எனது தம்பி மனைவி ஆகியோர் முன்னிலையில் பஞ்சாயத்து செய்தேன். அவ்வாறு எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஈடுகடன் பத்திரம் செல்லடிக்கப்பட்டதா அல்லது யார் வசம் உள்ளது என்று காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமானது நான் வழக்கு தாக்கல் செய்த காலவரை எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழ் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்தபின்பு எனது இரண்டு சகோதரர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. நானும் விவசாயம் செய்து வருகிறேன். அவ்வாறு விவசாயம் செய்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது இரண்டு சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக பட்டா மாற்றம் செய்தார்கள் என்றால் அது தவறு.

அவ்வாறு பட்டா மாற்றம் செய்ததால் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு கிடைத்த பாகத்தை 2ம் பிரதிவாதிக்கு கடந்த 24.06.2013ம் தேதி கிரையம் கொடுத்தார் என்றால் அது தவறு. கிரையம் கொடுத்தது தெரிந்தும், மேற்படி கிரையத்தை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேற்படி கிரையம் கொடுத்தபின்பு தான் வழக்கு தாக்கல் செய்தேன். 2, 3 பிரதிவாதிகளின் தந்தைக்கு கிடைத்த பாகத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் சேர்ந்து வெள்ளைமலைப்பட்டியை சேர்ந்த முத்து என்பவருக்கும், பின்னியப்பன் மகன் மதியழகன் என்பவருக்கும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது தவறு. வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் கிரையம் கொடுத்துள்ளார்கள். நான் ஒருபோதும் தாவா சொத்தில் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும், பிரதிவாதிகளும் ஒரே ஊரில் இருந்தும், அனைத்து விவரங்களும் தெரிந்தும் வேண்டுமென்றே பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரண்டு சகோதரர்கள் இறந்தபின்பு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே திருமணம் செய்து வைத்ததால் எனது பாக உரிமையை எனது சகோதரர்களுக்கு விடுதலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.06 15:20:49 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.